ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2469/36 - 2026 ජනවාරි මස 04 වැනි ඉරිදා - 2026.01.04

*2469/36 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இற்கு நியமிக்கப்பட்ட நிருவாகத் தத்துவக்காரரின் பதவிக்காலத்தை நீடித்தல்

2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித் தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 18 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025.07.04 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், 2025.07.04 ஆந் திகதியிடப்பட்ட 2443/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் ஊடாக நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் நிருவாகத் தத்துவக்காரராக நியமிக்கப்பட்ட திரு. பி. டபிள்யூ. டி. என். ஆர். ரொட்ரிகோ என்பவரின் பதவிக்காலத்தை 2026.01.04 ஆந் திகதியிலிருந்து ஆரம்பித்து 2026.07.03 ஆந் திகதி முடிவடையும் வகையில் மேலும் ஆறு (06) மாத காலப்பகுதியொன்றிற்கு இத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்நீடிப்பு நிருவாகத் தத்துவக்காரரின் நிருவாக மற்றும் நியதிச் சட்ட தொழிற்பாடுகளின் தொடர்ச்சியை வசதிப் படுத்துவதற்கும் 2026 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இற்குப் பொருத்தமானதொரு தீர்மானக் கருவியை நடைமுறைப்படுத்துவதை இயலச் செய்வதற்காகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முனைவர். பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளும் சபையின் தலைவரும் ஆளுநரும்,
இலங்கை மத்திய வங்கி.

EOG 12-0228

1A - G 45975— 23 (2025/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*